பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை 09.06.2024 கதிர் 214

# சட்டமா அதிபர் பதவி நீடிப்பை ஆராய நாளை கூடுகிறது அரசமைப்புச் சபை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்புக்கான பரிந்துரையை அரசமைப்பு பேரவை நாளை திங்கட்கிழமை பரிசீலிக்கவுள்ளது.

அரசியலமைப்பு பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ள நிலையில் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்திற்கு மேலும் 6 மாத ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள தியாகிகள் அறக்கட்டளையின் தலைவர் வாமதேவா தியாகேந்திரன் ஐந்தாயிரம் ரூபாய் தாள்களைக் கீழே போட்டு தனது சப்பாத்துக் கால்களால் அதன் மீது எறி நின்று அதனை அவமரியாதை செய்த விடயம்தான் கடந்த ஓரிரு நாள்களாக சமூக ஊடகங்களில் கடும் பரபரப்பு விவகாரம்.

தனது மகளின் 40ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்யப் போவதாக அவர் அறிவித்ததை அடுத்து அவரது அறக்கட்டளை அலுவலகத்தின் முன்பாக பெரும் எண்ணிக்கையானவர்கள் கூடினர். தனது பிறந்த நாளின் போதும் அவர் இப்படி உதவிப் பொருள்கள் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர். அதனால் அவர் உதவிப்பொருள் வழங்கப்போகிறார் என்று தெரிந்ததும் பலரும் அங்கு கூடியிருந்தனர்.

இருப்பினும் வந்திருந்தவர்களின் எண்ணிக்கை போதாது ☞ 2

## வேலை நிறுத்தம் செய்ய இது சரியான நேரமல்ல

### இப்படிச் சொல்கிறார் ரணிலின் ஆலோசகர்

வேலைநிறுத்தம் செய்வதற்கு இது சரியான நேரம் அல்ல. அனைத்து அரச பணியாளர்களும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயல்படவேண்டும் என்று வலியுறுத்தினார் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கடுவெல பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை ஆராய்ந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நம் நாட்டில் பல சம்பள முரண்பாடுகள் உருவாகியுள்ளன. ஒழுங்கு முறையில் சம்பள ஏற்பாடுகள் செய்யாததாலும், பல்வேறு காலகட்டங்களில் துரித பதில்களை வழங்க நடவடிக்கை எடுத்தமையாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சம்பள முரண்பாடு ☞ 2

## இன்று பதவியேற்கிறார் மோடி ரணில் நேரடியாகப் பங்கேற்பு

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவுக்கு பின்னர் மூன்றாவது முறையாக இந்திய பிரதமராக நரேந்திர மோடி இன்று பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந்தியை நியமிக்கவும் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக இந்திய பிரதமராக தனது 73ஆவது வயதில், நரேந்திர மோடி நாளை இரவு 7.15 மணிக்கு ராஷ்டிரபதி பவனில் பதவியேற்கவுள்ளார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மேலும், இதன்போது, மத்திய அமைச்சர் ☞ 2

## வெளிநாட்டு ஆசை காட்டி பண மோசடி புலம்பெயர் யாழ். வாசிகள் கைவரிசை

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலம்பெயர் நபர்கள், கிராமப்புற இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி மோசடிகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளும், நுழைவிசா மோசடிகளும் அதிகரித்து வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து வருவோரே இத்தகைய மோசடியில் அதிகம் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கிராமப்புற இளைஞர்களை இலக்கு வைத்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 30 தொடக்கம் 40 இலட்சம் ரூபாவரையில் பணமோசடி செய்கின்றனர்.

அவர்களின் ஏமாற்று நாடகத்தை அறியாத அப்பாவி இளைஞர்கள் இவர்களின் போலிவாக்குறுதிகளை நம்பிப் பணத்தை இழக்கின்றனர். இது தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த மோசடிகள் தொடர்பில் அவதானமாகவும், விழிப்பாகவும் இருப்பது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனித் தமிழ் வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு இரண்டுமே பயனளிக்காத வீணான முயற்சிகள்

### குமரகுருபரன் தெரிவிப்பு

தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு என்பன வரலாறு கற்றுத்தந்த பயனளிக்காத வீணான முயற்சிகளே என்று ----தமிழ் தேசிய பணிச் சபை தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னாள் பொதுச்செயலாளருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தனித் தமிழ் வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு என்பன எதிர்கால பேரம்பேசும் வல்லமையை இழக்கச் செய்யும்.

அதனை விடவும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களிக்கத் தவறினாலோ, நம்மவர்கடந்தகால ☞ 2

## இலங்கை கூலிப் படையினர் 70 பேரைக் காணவில்லை

ரஷ்ய - உக்ரைன் போரில் பணத்துக்காகப் பங்கேற்றகச் சென்ற இலங்கையைச் சேர்ந்த முன்னாள் படையினர் சுமார் 70 பேர் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் இல்லை என்று எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவினர் தெரிவித்தனர்.

இலங்கையிலிருந்து கூலிப் படையினராகச் சென்றிருந்த இவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் மேலும் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அந்தக் குழுவினர் மேலும் தெரிவித்தனர்.

இலங்கை கூலிப் படையினரில் சுமார் 220 பேர் நாட்டிற்குத் திரும்பும் நோக்கத்துடன் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யப்போரில் சிக்கித் தவிக்கும் இலங்கை கூலிப்படையினர் ☞ 8

## பாதாளக் குழுவினர் 18 பேர் சுற்றிவளைப்புகளில் கைது

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில். பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலுடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் மேலும் 18 பேர், கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினின் சுற்றிவளைப்பில் கொழும்பு 2, 10, 13 மற்றும் 08 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 55, 48, 39, 28, 48, 47, 51 மற்றும் 27 வயதுடைய 08 சந்தேக ☞ 2

## புதிய சுற்றறிக்கைகளுக்கு அமைய வெள்ள நிவாரணம்

### அதிகாரிகளுக்கு சாகல அறிவுறுத்தல்

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பழைய சுற்றறிக்கைகளுக்கு அப்பாற்பட்டு புதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடுவெல பிரதேச மக்களின் நலன்களை ஆராய்வதற்காக நேற்றுக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்ட அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெள்ளம் வடிந்ததன் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வேலைத் திட்டத்தை பார்வையிட்ட அவர், மக்களை மீள்குடியேற்று ☞ 2

### கூலிப் படையினர் குறித்துப் பேச

## ரஷ்யா செல்கிறது இலங்கைக் குழு

ரஷ்யா - உக்ரைன் போருக்காக ஓய்வுபெற்ற படையினரைக் கடத்துவது குறித்து ஆலோசிக்க இலங்கை தூதுக்குழு ஜூன் 25 ரஷ்யா செல்ல உள்ளது.

இந்தக் குழுவில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, பாதுகாப்பு செயலாளர் நாயகம் (ஓய்வு) கமல் குணரத்ன மற்றும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்க ஆகியோர் அடங்குவார்கள்.

ரஷ்யா - உக்ரைன் போருக்காக ஓய்வு பெற்ற இலங்கைப் படையினரைக் கடத்தியமை தொடர்பில் இதுவரை 486 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான எந்தவொரு தகவலையும் 0112441146 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்க முடியும்.

## இனி இது .....

என்று தனக்குக் கவலை என்றும் தான் பணத்திற்கு முக்கியத்துவம் தருவதில்லை என்றும் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின்போதே, தனது சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்துக் கீழே போட்டு அதனை மிதித்து அழிச்சாட்டியம் பண்ணினார்தியாகேந்திரன். இந்தக் காணொலியைப் பார்த்தவர்கள் சமூகஊடகங்களில்சகட்டுமேனிக்கு தியாகியை வைது வருகிறார்கள்.

இந்த லட்சணத்தில் தனக்கு வடக்கு மாகாண ஆளுநர் பதவியைத் தருமாறும் அவர் அந்த நேர்காணலில் கூறுகின்றார். இங்கிருக்கும் அரசியல்வாதிகள் எதையும் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டிய அவர், தன்னிடம் அதிகாரத்தைத் தந்து பார்த்தால் தெரியும்என்றும்பீற்றிக்கொள்கிறார். இதுவேறு தமிழ் மக்களைக் கடும் சீற்றத்திற்குள்ளாக்கியுள்ளது.

பணம், பொருள் என்று உதவி களைவழங்கியதற்காகபணத்தைக் காலில்போட்டுமிதிக்கும்ஒருவரிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் தமிழ் மக்களின் கதி என்னவாகும் என்று அவர்கள் கொந்தளிக்கிறார்கள்.

தியாகி கடந்த காலங்களில் தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வதற்கு முயன்றவர். எனினும் சில அரசியல் கட்சிகள் அவரைப் பயன்படுத்திக்கொண்டபோதும் அவருக்குப் பதவி வழங்க முன்வரவில்லை. அதன் பின்னர் அவர் இராணுவத்தினர் ஊடாக மக்களுக்கு வீடுகளையும் கட்டிக் கொடுத்திருக்கிறார். சிங்கள மக்களுக்கும் ஏராளமான உதவி களை வழங்கி வருகின்றவர். கொழும்பு அரசின் அமைச்சர்கள் ஊடாக அந்த உதவிகளை வழங்கு வதை வழக்கமாகக் கொண்டவர்.

இவர் முன்னர் ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லம் ஒன்றை நடத்தி வந்தார். பின்னர் அது அதிகாரிகளால் மூடப்பட்டது. அந்த இல்லம்குறித்தகுற்றச்சாட்டுக்களைத் தொடர்தேஅந்தஇல்லம்மூடப்பட்டது. இந்த நிலையில் இப்போது அவர் பணத்தைத் தூக்கி வீசி திமிருடன் நடந்துகொண்டிருப்பது கடும் சர்ச்சையையும் பெருமளவு வெறுப்பையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கால நீடிப்பு வழங்க ஜனாதிபதி அண்மையில் பரிந்துரைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் சட்ட விளக்கங்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஜூன் 26 ஓய்வு பெற உள்ளார்.

## வேலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து முறையான ஆய்வு நடத்தி அறிக்கை தயாரிக்க கடந்த அமைச்சரவையில் அங்கீகாரம்அளிக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறும்.

ஆனால் இது மக்கள் சிரமப்படும் சந்தர்ப்பம். நாடு பெரும் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டு, மீண்டும்பொருளா தார ரீதியில் ஸ்திர நிலைமையை அடைந்திருந்தாலும், அனைவரும் அவதானமாக இருக்கவேண்டும். எனவே, வேலைநிறுத்தம்செய்வ தற்கு இது சரியான நேரம் அல்ல. அனைத்துஅரசபணியாளர்களும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிரச்சினைகளைநாம்ஒருபோதும் புறக்கணிக்க மாட்டோம். அதுபற்றிய புரிதல் எமக்கு உள்ள துடன் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான வேலைத் திட்டத் தையும்தயாரித்துள்ளோம்-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குழுவின் ஏனைய உறுப்பினர் களுக்கும் பதவிப்பிரமாணம் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ள நிகழ்வுக்கு 7 நாடுகளின் தலை வர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இந்த நிகழ்வில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பங்களாதேஷ்பிரதமர், மாலைத்தீவு ஜனாதிபதி, மொரிஸியஸ்பிரதமர்த், சீஷெல்ஸ் துணை ஜனாதிபதி, நேபாள பிரதமர், பூட்டான் பிரதமர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நரேந்திர மோடியினால் தனிப்பட்ட ரீதியில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ள தலைவர் களுக்கு, ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி திரௌபதி முர்முவால் நாளை விருந்துபசாரமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், பிரபலங்கள் உள் ளிட்ட 8000-க்கும்அதிகளவானோர் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரதமர்பதவியேற்புவிழாவுக்கு வரும் உலகத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் இருந்து விழா நடைபெறும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வரபிரத்தியேகவழித்தடம்அமைக் கப்படுவதாகவும்இந்தியஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நரேந்திரமோடியின்பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காக பங்களாதேஷ்பிரதமர்ஷேக்ஹசீனா முதல் சிறப்பு விருந்தினராக புது டெல்லியை இன்று சென்றடைந் தார்.

டெல்லி விமான நிலையத்தில் அவரை வெளியுறவுத்துறை செய லாளர் முக்தேஷ் பர்தேசி வரவேற் றார். இதேவேளை, இந்திய பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவியேற்பை அடிப்படையாகக் கொண்டு டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் மாளிகையை அண்மித்த பகுதிக ளில் ட்ரோன்கள் உள்ளிட்ட வற்றை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வழமையான வான்வழி பயன் பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள தாக டெல்லி பொலிஸ் கமிஸனர் சஞ்சய் அரோரா அறிவித்துள்ளார்.

## பாதாளக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் மாதிவெல, அங்கொடை, தெஹிவளை மற்றும் இராஜகிரிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 51, 35, 32 மற்றும் 27 வயதுடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில், பிட்டபெத்தர பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவர் கைதானார்.

மாத்தறை பொலிஸ் குற்றத்த டுப்புபிரிவினரின்சுற்றிவளைப்பில் ரொட்டும்ப மற்றும் தங்காலை ஆகியபகுதிகளைச்சேர்ந்த 44, 33, 28 மற்றும் 48 வயதுடையநான்கு பேர், கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 19 இல், ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றி வளைப்பில், இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 1,439 பேர் கைதாகினர்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுக்குச் சென்றிருந்தது. அந்தக் குழுவினர் திரும்பி வந்த பின்னரே இந்தத் தகவல்களைத் தெரிவித்தனர்.

## தனித் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரலாறுபோல்சிறுதொகையிலேயே வாக்களித்தாலோ, தமிழ் மக்கள் ஆணை கோரும் சுயநிர்ணய உரிமையை, அபிலாசைகளை, நிராகரித்துவிட்டனர் என்று சிங்களவர்கள் உலகிற்கு அடித்துக் கூறுவர். சுயநிர்ணய உரிமையும் கனடாவின் கியூபேக் மாதிரிப் போய்விடும்.

பேரம்பேசும் வல்லமையுள்ள, சிங்களத்தலைமைகள்ஏற்றுக்கொள் ளக்கூடிய நாடாளுமன்ற உறுப் பினர்கள், பிரமுகர்கள் இன்னமும் எம்மிடையே உள்ளனர். இவர்கள் முதலில் பேச்சுக்களை ஆரம்பித்து, தேசிய வேட்பாளர்களை வலிந்திளுத்து தீர்வு பற்றிய அவர்தம் உத்தரவாதத்தைப் பெறவேண்டும். தேர்தலின் பின்னர் அவர்கள்அதனைச்செய்யத்தவறின் அதனை உலகறியச் செய்வது தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு என்பதைவிட சிறந்த சாணக்கியமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாம்விரும்பியோவிரும்பாமலோ தேசியகட்சிகளூடாக ஒரு ஜனாதிபதி தெரிவாகப்போகின்றார். ஆதலினால் எமது தனி தமிழ் வேட்பாளரை அவர்கள் பெரிதுபடுத்த வேண்டிய தேவை இல்லை. தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் நமக்கான உரிமையை நாமே இழக்க தயாரானவர்கள் ஆகின்றோம்.

மாறாக. நாம் நம்மையிழந்த, நம்வளங்களை இழந்த போரினால் அனைத்துலகமும் எமது அபிலாசைகளை அறியும். பொதுத் தேர்தலிகளில் தமிழர் விடுதலை கூட்டணியின் ஏகோபித்த வெற்றி மூலமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றி மூலமும் எமது சுய நிர்ணய உரிமையை உலகறியச் செய்துவிட்டோம். எனவேநாமும்நம்வல்லமையுள்ள மக்கள் பிரதிநிதிகளும் தேசிய வேட்பாளர்களுடன் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும். வல்லவர்களான சுமந்திரன், விக்னேஸ்வரன் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் இதனை முன்னெடுக்க வல்லவர்களே. வழமைபோல் பழக்கப்பட்ட செத்த பாம்பை மீண்டும் மீண்டும் அடிக்கும்செயல்களைசெய்துகாலம் கடத்துவதுவீணானசெயல்எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும்செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ளவீடுகளைப்பார்வை யிட்டபின்னர்வீட்டுஉரிமையாளர் களுடனும் அவர் கலந்துரை யாடினார். எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள நிலைமை யைக் கட்டுப்படுத்த எடுக்க வேண் டிய நடவடிக்கைகள் குறித்தும் பேசினார்.

கடுவெல வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ ரன்கடு பத்தினி விகாரை வளாகத்தில் வெளிநாட்டு வைத்தியக் குழுவின் பங்குபற்று தலுடன் நடைபெறும் வைத்திய முகாமையும் சாகல ரத்நாயக்க பார்வையிட்டார்.

இந்தப் பயணத்தின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

இயற்கை இடரினால் பாதிக்கப் பட்ட மக்களின் இயல்பு வாழ்க் கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத் துள்ளார். அவர்வழங்கியஅறிவுறுத் தல்களின்படிஅவ்வப்போதுபாதிக்கப் பட்ட பகுதிகளுக்குச் சென்று வருகிறோம். மக்களுக்கு நிவார ணம் வழங்கும் பணியை வினைத்திறனாக்க தேவையான தீர்மானங்களை எடுக்க அதிகாரிக ளுக்குஅதிகாரம்வழங்கியுள்ளோம்.

அத்தகைய முடிவுகளை எடுக்க முடியாத சந்தர்ப்பங்களில், இறுதி முடிவைஎடுக்கமேல்முறையீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்குத் தேவையான பின்னணியை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட கொலன்னாவ பிரதேசத்திற்கும் சென்றசாகல, அங்கும்பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் தொடர்பாக ஆராய்ந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப்பார்வையிட்ட பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கொலன்னாவ ஸ்ரீ சம்புத்தராஜ புராண விகாரையில் நடைபெற்ற நடமாடும் மருத்துவ முகாமிற்கும் சென்று பணிகளை நோட்டம் விட்டார்.

அதன் பின்னர், கொலன்னாவ பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவார ணம்வழங்கும்வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க கூறியதாவது:

பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டுக்கும் 10,000 ரூபா கொடுப்ப னவு உடனடியாகவழங்கதீர்மானிக் கப்பட்டது. மேலும், பகுதி அளவில் அல்லது முழுமையான சேதம் ஏற்பட்ட வீடுகளைக் கண்டறிந்து, அந்தக் குடும்பங்களுக்கு மேலும் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

2019 சுற்றறிக்கையின்படி, வெள்ளம் ஏற்பட்டால், இடைத்தங் கல் முகாமில் இருந்த மக்களுக்கு மாத்திரமேஇழப்பீடுவழங்கப்பட்டது. ஆனால் சுற்றறிக்கையை மாற்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதன்படி, அந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று வீட்டை துப்புரவு செய்யும் பணிகளைத் தொடர முடியும்.

ஜனாதிபதியின்பணிப்புரையின் பிரகாரம்அனர்த்தத்தினால்முற்றாக சேதமடைந்தவீடுகள்அனைத்தும் இராணுவத்தின் பங்களிப்புடன் அரச செலவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மருந்துகள் தேவைப்படும் மக்களுக்கு மருந்துகளை வழங்கும் வேலை த்திட்டம்முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெள்ளம் வடிந்த பிறகு, மக்கள் பொதுவாக தொற்றுநோய்களால் பாதிக்கப்படுவார்கள். குறிப்பாகசிறு குழந்தைகளையும்முதியோரையும் இதுபோன்ற நோய்களில் இருந்து காத்துக்கொள்ள வேண்டும்.

டெங்கு நோய் பரவும் அபாயத்தில் உள்ளோம். அதை எதிர்கொள்ளும் திட்டத்தை தயாரித்துள்ளோம். கடற்படை, செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அனர்த்தங்களினால்பாதிக்கப்படாத அருகில் உள்ள மக்களையும் இணைத்துக்கொண்டுபாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிணறுகளை மீண்டும் பயன்படுத் தும் நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனர்த்தத்தினால் பாதித்த பகுதிகளில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க வைத்திய முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு மருத்துவக்குழுக்களும்வைத்திய முகாம்களை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. பிரதேசசெயலகங் கள் ஊடாக பல மருத்துவ சிகிச்சை நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த இராணுவமருத்துவக்குழுக்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேச மக்கள் குறித்தும் ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். அதிகாரிகளுக்குத் தேவையான அனைத்து நிவாரணங்களையும் வழங்குமாறுஜனாதிபதிபணிப்புரை விடுத்துள்ளார்.

இதுபோன்றவெள்ளப்பெருக்கு மீண்டும் ஏற்படாமல் இருக்க தகுந்த திட்டம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அனுமதியற்ற நிர்மாணங்கள், காணிகளை நிரப்புதல் போன்ற காரணங்களால் இதுபோன்ற வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. எனவே, வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அனுமதியற்றகட்டுமானம்மற்றும் காணி நிரப்புப் பணிகளை நிறுத்த அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறவும் எதிர்பார்க்கப்படுகிறது.

களனி ஆற்றின் இரு கரைகளி லும்உள்ளமக்களுக்காகபுதியநகர மொன்றைஉருவாக்குவதுகுறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக மருத்துவமனைகள், பாடசாலைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் என அனைத்து வசதிகளுடன் கூடிய நகரத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஐனுர் மருத்துவமனை, இ.போ.சடிப்போ போன்ற அரச நிறுவனங்கள் உள்ளன. எனவே புதிய நகரை உருவாக்குவது குறித்து இப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி எதிர்கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப் படுகிறது.

இங்கு அனைவரின் இணக்கப்பாட்டுடன் சரியான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இத்திட்டம் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.' என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வர்த்தக பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இலங்கைக்கு உதவுகிறது யுஎஸ்எயிட்







சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக வர்த்தக பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவி செய்கிறது.

அமெரிக்க அனுசரணையுடன் இலங்கையிலுள்ள 23 சர்வதேச வர்த்தக மத்தியஸ்தர்கள் பயிற்சியையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு இம்முன்முயற்சி வழிவகுத்துள்ளது.

கடந்த மே 29ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஒரு வைபவத்தில், கைகுலுக்கி ஓர் உதாரண மத்தியஸ்த செயற்பாட்டினை ஆரம்பிக்கும் புதிதாக அங்கீகாரம் பெற்ற வர்த்தக மத்தியஸ்தர்களின் குழு. அம்மத்தியஸ்தர்கள் யுஎஸ்எயிட்டின் வினைத்திறன் மற்றும் செயற்றிறனுடைய நீதி எனும் செயற்றிட்டத்தின் உதவியுடன் தமது பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்ததை இந்நிகழ்வு கொண்டாடுகிறது.

வணிக நிறுவனங்கள் தமது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடரும் பாரம்பரிய முறைக்குப் பதிலாக விரைவான மற்றும் செலவு குறைந்த ஒரு மாற்றீட்டை வழங்கக்கூடிய இலங்கையிலுள்ள தகுதிவாய்ந்த மத்தியஸ்தர்களின் எண்ணிக்கையை இது இரட்டிப்பாக்கியுள்ளது.

இந்த 23 மத்தியஸ்தர்களும் யுஎஸ்எயிட்டின் வினைத்திறன் மற்றும் செயற்திறனுடைய நீதி எனும் செயற்றிட்டத்தின் கீழ், தகவல் தொடர்பு, சிக்கலைத் தீர்த்தல், உணர்வுகளை முகாமை செய்தல் மற்றும் தடைகளை வெல்லல் போன்ற முக்கிய பரப்புகளில் விரிவான பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.

ஏடிஆர் மற்றும் ஏடிஆர் பயிற்சியில் நிபுணத்துவம் பெற்ற, லாப நோக்கற்ற, புகழ்பெற்ற சுயாதீன நிறுவனமான சிங்கப்பூர் சர்வதேச மத்தியஸ்த மத்தியநிலையம் இந்தப் பயிற்சியை நடத்தியது. ஒரு நான்கு மாத வழிகாட்டல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர், இந்த மத்தியஸ்தர்கள் 2026ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் இலங்கையில் சுமார் 100 வர்த்தக பிணக்குகளில் மத்தியஸ்தம் செய்வதற்கு தமது புதிய திறன்களைப் பயன்படுத்துவார்கள்.

வணிகங்களுக்கும் வணிகங்களுக்குமிடையே அல்லது வணிகங்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே அல்லது வணிகங்களுக்கும் நுகர்வோருக்கும் இடையேயான பிணக்குகளுக்கு ஒரு விரைவான தீர்வினை ஏடிஆரின் ஒரு முக்கிய வடிவமான வர்த்தக மத்தியஸ்தம் வழங்குகிறது. இம்முறையானது செலவு குறைந்ததாக இருப்பதுடன், வணிக உறவுகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், சர்வதேச தீர்வு ஒப்பந்தங்கள் மிகவும் செயற்றிறனுடன் அமுலாக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் சர்வதேச வர்த்தகத்துக்கும் அது உதவி செய்கிறது.

புதிதாக பயிற்சியளிக்கப்பட்ட வர்த்தக மத்தியஸ்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு நிகழ்வில், உரையாற்றிய அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக் சொனெக், 'சர்வதேச சிறந்த நடைமுறைகளைத் தழுவி ஒரு சாதகமான முதலீட்டுச் சூழலை உருவாக்குவதற்கு இலங்கையுடன் ஒத்துழைப்பதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது.

இப்பங்காண்மையானது செலவு நிறைந்த வழக்குகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான திறன்களை மத்தியஸ்தர்களுக்கு வழங்குவது மட்டுமன்றி, அவர்களின் திறன்களின் தொடரான விருத்திக்கும் உதவி செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதார ரீதியிலான மீண்டெழும் தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பங்களிப்பு செய்கிறது.

புதிதாகப் பயிற்சி பெற்ற வர்த்தக மத்தியஸ்தர்களை கௌரவிக்கும் ஒரு வைபவத்தில் கலந்துகொண்ட அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக் சொனெக் (நடுவில்). யுஎஸ்எயிட்டின் வினைத்திறன் மற்றும் செயற்றிறனுடைய நீதி எனும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மத்தியஸ்தர்கள் தங்கள் பயிற்சியைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையில் ஏடிஆருக்கு விரிவான உதவிகளை யுஎஸ்எயிட் வழங்குகிறது. வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள், ஏடிஆர் மத்தியநிலையங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு வர்த்தக மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை மற்றும் ஏடிஆர் சிறந்த நடைமுறைகள் ஆகிய விடயங்களில் பயிற்சியளிப்பதற்காக உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களுடன் செயற்றிட்டம் ஒத்துழைப்புடன் பணியாற்றுகிறது.

மேலும், சர்ச்சைகளை விரைவாகத் தீர்த்தல் மற்றும் நீதி அமைப்பில் உள்ள தாமதங்களையும் வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்குவதையும் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் நுநுதுஆனது, மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் வர்த்தக மேல் நீதிமன்றங்களின் பங்காண்மையுடன் நீதித்துறை மற்றும் நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்படும் மத்தியஸ்தத்துக்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

இந்த விரிவான முன்முயற்சிகளூடாக இலங்கையில் நீதித்துறைச் செயன்முறையின் ஒட்டுமொத்த வினைத்திறனை மேம்படுத்துகிறது.(05)

## போதைப்பொருள் அடங்கிய இரண்டு மாத்திரைகளை உட்கொண்ட இரு மாணவர்கள் வைத்தியசாலையில்



அம்பாறை, பதியத்தலாவ பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் போதைப்பொருள் அடங்கிய இரண்டு மாத்திரைகளை உட்கொண்ட இரண்டு மாணவர்கள் மயங்கி விழுந்த நிலையில் பதியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் 1ம் தரத்தில் கல்வி கற்கும் 6 வயது மாணவனும் 7ம் ஆண்டில் கல்வி கற்கும் 11 வயது மாணவனுமே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த இரண்டு பாடசாலை மாணவர்களுக்கும் போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் பதியத்தலாவ, கெஹெல் உல்ல பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடையவராவார்.

இதேவேளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இரண்டு மாணவர்களும் சகோதரர்கள் என்பதுடன் இவர்கள் இருவரும் பாடசாலைக்கு வரும் வழியில் கைதான இளைஞனை சந்தித்துள்ள நிலையில் அந்த இளைஞர் இவர்களுக்கு போதை மாத்திரைகளைக் கொடுத்துள்ளார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பின்னர் பாடசாலைக்கு சென்ற இரண்டு மாணவர்களும் அந்த இளைஞன் கொடுத்த போதை மாத்திரைகளை உட்கொண்டுள்ளதுடன் சிறிது நேரத்தில் இருமாணவர்களும் மயங்கி வீழ்ந்துள்ளனர் எனவும் இது குறித்து அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டதுடன் ஆசிரியர்கள் சிலரால் இந்த மாணவர்களை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## குகுல் சமிந்த மீது கைதிகள் தாக்கு

4 வயது சிறுமியை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 'குகுல் சமிந்த' என்பவர் சிறைச்சாலை கைதிகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவர் 4 வயது சிறுமியைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கடந்த 5 ஆம் திகதி வெலிஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் வெள்ளிக்கிழமை சிறைச்சாலை கைதிகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ள நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## ஒரு லட்சம் கஞ்சா செடிகளுடன் மூவர் கோணஹங்காரவில் கைது

மொனராகலையில் கோணஹங்கார பொலிஸ் பிரிவில் 112,500 கஞ்சா செடிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கோணஹங்கார பொலிஸார் தெரிவித்தனர்.

கோணஹங்கார பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்மடஹடல யால வனப் பகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக புத்தல விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது பயிரிடப்பட்ட 112,500 கஞ்சா செடிகளை கைப்பற்றியுள்ளனர்.

42, 42, 48 வயதுகளையுடைய எம்பிலிபிடிய பகுதியைச் சேர்ந்த ஒருவர், தனமல்வில பகுதியைப் சேர்ந்த இருவர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் கோணஹங்கார பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுவருகின்றன எனவும் கோணஹங்கார பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## வெலிகமையில் நான்கு வயது மகனை தாக்கி சித்திரவதை செய்த தாயும் காதலனும் கைது

4 வயது மகனைத் தாக்கி சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் தாயும் தாயின் காதலனும் கைது செய்யப்பட்டனர் என வெலிகமை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகமை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய தாயும் 40 வயதுடைய தாயின் காதலனும் 4 வயது மகனைத் தாக்கி கயிற்றால் கட்டி சித்திரவதை செய்வதாக 6 ஆம் திகதி இரவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சித்திரவதைக்குள்ளான மகன் வெலிகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சித்திரவதைக்குள்ளான மகன் மின்சார கம்பிகளைச் சேதப்படுத்தியதால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட தாயையும் தாயின் காதலனையும் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மை வெளிப்படவேண்டும்

ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகக்குற்றச்சாட்டுஎழுப்பப்பட்டுள்ளது. அது குறித்த விசாரணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தான் அச்சுறுத்தப்படுகின்றார் என்கிற விடயத்தை ஆனி 7ஆம் நாள் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ஹர்ஷ டி சில்வா. அன்று சிறப்புரை ஒன்றை நிகழ்த்திய அவர், தான் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே நிதிக்குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார் என்றும் தனக்கு அலுவலகம் கிடையாது எனவும், சேவை செய்வதற்கு மூன்று பேர் மட்டுமே உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் தமது தனிப்பட்ட பணத்தில் அவர்களுக்கு சம்பளம் வழங்கினார் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், நிலக்கரி விவகாரம், சீனி மோசடி, மத்திய வங்கியின் சம்பளப் பிரச்சினைகள் குறித்து நிதிக் குழு தொடர்ந்தும் பேசி வருவதாகத் தெரிவித்த அவர், பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும்தனக்குஅச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் விஸா விவகாரம் தொடர்பிலும் இவ்வாறானதொரு நிலை காணப்படுவதாகவும், இந்த சம்பவத்தை மூடி மறைக்க முயற்சிப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்.

யாருடையநலன்களுக்காகஇப்படிச்செய்கிறார்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், தன் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால், அதற்கான பொறுப்பை சபாநாயகரும் ஏற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இந்தக் குற்றச்சாட்–டுத் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு வழங்கிய உத்தரவிற்கு அமைய ஹர்ஷ டி சில்வாவை அச்சுறுத்தியவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே கடமை நிமித்தம் தனது கருத்துக்களை வெளிப்படையாகக் கூற முடியாத நிலமை இருக்கின்றது என்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. ஆளும் தரப்பு என்னதான் ஊழல், மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகக் காட்டிக்கொண்டாலும் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குரல் எழுப்பும்நாடாளுமன்றஉறுப்பினருக்கேஅச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்றால் மற்றவர்களின் நிலையை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எனவே இது விடயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுஉண்மைஎன்னஎன்பதுகுற்றவாளிகள் யார் என்பதும் வெளிப்படுத்தப்படவேண்டும். அத்துடன்குற்றவாளிகள்நீதியின்முன்நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவும் வேண்டும். விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என்கிற சால்யாப்புக்கள் மூலம் இதனை மூடிமறைக்கக்கூடாது.

# எடுத்தோம், கவிழ்த்தோம்




**என். சத்தியமூர்த்தி**

அண்மையில் நடந்து முடிந்துள்ள இந்திய நாடாளுமன்ற தேர்தல்களை, அனைத்து இந்தியர்களும்முழுமையாகஅவதானித்தார்களோ இல்லையோ, அண்டை நாட்டு மக்களும் அவர்களுடைய அரசு மற்றும் அரசியல் தலைவர்களும், பத்திரிகை மற்றும் மீடியா நண்பர்களும் அட்சரம் பிசகாமல் படித்து வந்தார்கள். அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருக்கும் இலங்கை குறித்து கேட்கவே வேண்டாம். அரசு மற்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகளைவிட, தமிழ் மக்களும் அவர்களது புலம்பெயர்ந்த உறவுகளும் ஏதோ தங்கள் வீட்டு நிகழ்ச்சி போன்று இந்திய தேர்தல் குறித்து கவலை கொண்டார்கள்.

விடயம் அதோடு நின்றுவிடவில்லை. இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான அணி தேர்தலில் வெற்றி பெற்றதை, குடாநாட்டில், இந்து சிவசேனா கட்சி கொண்டாடும் முகமாக, கோவில்களில் பூசை செய்து, இனிப்புகள் வழங்கியது என்று பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டில் எம்ஜிஆர் கால தேர்தல் வெற்றிகளுக்கு பின்னர், தமிழர் தரப்பில் ஒரு பகுதியினராவது இவ்வாறுஇந்தியதேர்தல்களைஅவதானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் தமிழர் பகுதிகளில் எது போன்ற எதிர்வினைகள்தோன்றும்என்பதைபொறுத்திருந்து பார்க்கவேண்டும். அதிலும் குறிப்பாக, அந்த எதிர்வினைகள், தமிழ் சமுதாயத்திலும் குறிப்பாக மத சார்பற்ற தமிழ் அரசியல் பரப்பிலும், அண்மை காலத்திலும் எதிர்காலத்திலும் எது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் மிகவும் கவனமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம். அதன் வெளிப்பாடு, தமிழ் அரசியலையும் சமூகத்தையும் பிரிக்கவல்லது. குறிப்பாக, தமிழ் அரசியலை இந்திய அரசிடமிருந்து மேலும் விலக்கி நிறுத்தும் வல்லமை பெற்றது.

### மறந்த விடயம்

இதற்கிடையில், கடந்த மாதம் இனப்போரின் கடைசி காலம் குறித்து தமிழர் தரப்பு முள்ளிவாய்க்கால் தொடங்கி, உலகெங்கிலும் அரங்கேற்றிய நினைவுகூறல் நிகழ்ச்சிகளை ஒட்டி, பல்வேறு தமிழ் தரப்பினர் பலவாறாக தொடர்ந்தும் கருத்து கூறிவந்தனர். இதில், குறிப்பாக புலம்பெயர்ந்தோரிடையேயான கருத்துருவாக்கங்கள் கவலை கொள்ளத்தக்க வகையை சேர்ந்தவை.

அவர்கள், சிறு குழுக்களாகவே இருக்கலாம். ஆனாலும், இந்தியாவில்காங்கிரஸ்தலைவர்களான சோனியா காந்தியும் ராகுல் காந்தியும், முள்ளிவாய்க்கால் வந்து பிராயசித்தம் செய்து கொள்ளவேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் விதண்டாவாதமானவை மட்டுமல்ல. அவை அதிகபிரசங்கிதனமானவை. உண்மைக்குப் புறம்பானவை.

இவர்களும் சரி, இது போன்றவர்களும் சரி, இவர்களுடைய கருத்துக்களையே உள்நாட்டில் பின்பற்றுபவர்களும் சரி, வேண்டுமென்றே மறந்த விடயம் ஒன்று உள்ளது. இவர்கள் இனப்போரில் இந்தியாவின் பங்களிப்பு என்ற ஒரு தலைப்பை வைத்துக்கொண்டு எந்தவொரு விடயமானாலும், 'அதோ கீர்தனாராம்ப காலத்திலே...' என்று பழைய பல்லவி பாடத் தொடங்கி விடுவார்கள்.

அவர்கள் கூற்றுப்படியே பார்த்தால்கூட, விடுதலை புலிகள் அமைப்பு உள்ளிட்ட தமிழ் போராளி குழுக்களுக்கு ஆயுதம் மற்றும் ஆயுத பயிற்சி அளித்து அவர்களைப் பேணி பாதுகாத்து, பண உதவிகூட வழங்கியது இந்திய அரசே. அதைச் சொல்லப்போனால், அவர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி என்று அன்னையையும் மகனையும் பிரித்து பேசி அரசியல் செய்வார்கள்.

இத்தனை வருடங்களில் அவர்களுக்கு புரியாத ஒரு விடயம், இந்தியா போன்ற பெரிய நாட்டில், இது போன்ற ஒரு கொள்கை முடிவு ஆட்சிக்கு ஆட்சி மாறாது. தலைவருக்கு தலைவரும் அது மாறாது. அவ்வாறு இருந்திருந்தால், இந்திரா காந்தியே, தனது வெளியுறவு ஆலோசகரான பெரியவர் ஜீ பார்த்தசாரதி, வெளியுறவு துறை அமைச்சர் மற்றும் அமைச்சக இராஜதந்திரிகள் ஆகியோரை வேலைமெனக்கெட்டு இனப்பிரச்சினை குறித்து தீர்வு எடுக்க அனுப்பி வைத்திருக்கமாட்டார்.

மாறாக, ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்தனேயுடன் நேரடி பேச்சு மூலமே அனைத்து முடிவுகளையும் எடுத்திருப்பார். அவர் அவ்வாறு செய்யாததற்கு காரணம் இந்தியா போன்ற நாட்டில், மத்திய அரசின் துறை சார்ந்த நினைவலைகள் அடுத்தடுத்து வரும் ஆளும் தரப்புகளுக்கும் அரச தலைமைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்த நீள-அகலங்கள் தெளிவாக விளக்கி வரும். அதன் அடிப்டையிலேயே புதிய ஆட்சியாளர்களும் இந்தப் பிரச்சினைகளை அணுகுவார்கள்.

இதுதான், ராஜிவ் காந்தி காலத்தில் நடந்தது. இதுவே தற்போது, பிரதமர் நரேந்திர மோடி காலத்திலும் நடக்கிறது. அவரது பாரதிய ஜனதா மற்றும் எதிரணியான காங்கிரஸ் கட்சிக்கும் குத்துப் பழி, வெட்டுப் பழி என்று அரசியல் நடக்கும்போதும், வெளியுறவுப் பிரச்சினைகளை, தற்போதைய இந்திய அரசும்கூட முந்தைய கொள்கைகளின் தொடர்ச்சியாகவே காண்கின்றது என்பது தெளிவு. இது, இனப்பிரச்சினை குறித்த இந்திய அரசின் கொள்கையில் வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது என்பதே உண்மை.

### கை நீட்டி...

இது இப்படி என்றால், தற்போதைய தமிழர் சமூகம் மறந்த மற்றோரு விடயம் இருக்கிறது. இளைய சமூகத்தில் எத்தனை பேருக்கு இந்த உண்மை தெரிந்திருக்கும் என்பதுகூடப் புலப்படவில்லை.

விடயம் இதுதான். இந்திய - -இலங்கை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# எடுத்தோம், கவிழ்த்தோம்

4ம் பக்க தொடர்ச்சி...........

ஒப்பந்தம் குறித்து பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சு நடத்திய பிரபாகரன், தனது போராளிகளை சமூக நீரோட்டத்தில் கலப்பதற்கு பண உதவி தேவை என்று கோரியதாகச் செய்திகள் அப்போதே தெரிவித்தன. அதன் அடிப்படையில், இந்திய ரூபாய் ஒன்பது கோடி வழங்கப்பட்டதாகவும் அறியப்பட்டது. தொடர்ந்து தேவையானால் மேலும் பண உதவி வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



அரசியல் சதுரங்கத்தில், சில அடிப்படை விதிகள் உள்ளன. இரு தரப்பினர் ஏற்றுக்கொண்ட ஒரு முடிவின் அடிப்படையில் பணம் கை மாறி விட்டால், அதன் பிறகு, அந்த பணத்தை பெற்றவர், இழந்துவிட்ட தனது மரியாதையை மீட்டு பெறமுடியாது. தனி மனிதர்களை பிணைக்கும் இது போன்ற விதிகள் அமைப்புகளுக்கும் பொருந்தும்.

அந்த விதத்தில், இந்திய அரசிடம் பணம் பெற்றுக்கொண்ட விடுதலை புலிகள் அமைப்பு, ஒத்துக்கொண்டது போலவே, தங்களது ஆயுதங்களை ஒப்படைத்திருக்கவேண்டும். மாறாக, வெத்து துப்பாக்கியை மட்டுமே இந்திய அமைதிப் படையினரிடம் கொடுத்தபோது, போர் பயிற்சி மட்டுமே பெற்ற அந்த வீரர்கள், விடுதலை புலிகள் அமைப்பின் உண்மையான நோக்கத்தை நன்றாகவே புரிந்துகொண்டார்கள் எனலாம்.

இதுவேதான், கடைசி போருக்குத் தூண்டுதலாக இருந்த நிகழ்சிகளுக்கும் காரணமாக இருந்தது எனலாம். எப்படி இந்தியாவிடம் விடுதலை புலிகள் அமைப்பு பணம் வாங்கியதோ, அது போன்றே 2005-ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களை கட்டாயப்படுத்தி வாக்களிக்க விடாமல் இருக்கவும் பெரும் தொகையை பெற்றுக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு அப்போதே எழுந்தது. என்ன, விடுதலை புலிகள் அமைப்பின் துப்பாக்கி குண்டுகளுக்கு பயந்து தமிழர்கள் யாரும் வாய் திறக்கவில்லை.

எப்போதுஇவ்வாறுபெரும்தொகையைபெற்றுக்கொண்டு விடுதலைபுலிகள்அமைப்புமஹிந்தராஜபக்சஜனாதிபதியாக தெரிவாவதற்கு வழிவகை செய்ததோ, அப்போதே அவர் தலைமையிலான அரசுடன் பேரம் பேசும் தகுதியையே இழந்துவிட்டது. அதன் பின்னர் நடைபெற்ற பேச்சுகள் எல்லாம் இரு தரப்பினரின் பசப்பு வார்த்தைகள் மட்டுமே.

இங்கு, விடுதலை புலிகள் பணம் வாங்கிக் கொண்டமை, முன்பு தமிழ் நாடு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரிடம் இருந்து நான்கு கோடி ரூபா பெற்றுக் கொண்டது போல் அல்ல. அது அன்பளிப்பு. அதற்கு யாரும் கணக்கு கேட்க மாட்டார்கள். என்றாலும், அது குறித்து எம்ஜிஆர், இந்திய மத்திய அரசிடம் கூறாமல் மறைத்திருப்பார் என்று யாராவது நினைத்திருந்தால், அவர்கள் முட்டாள்கள். தற்போதைய இளையு சமூகத்தையும் முட்டாள் ஆக்க பார்க்கிறார்கள்.

## நட்பு பாராட்டி...

இது ஒரு புறமிருக்க, தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மறைந்த தலைவர் கருணாநிதியையும் இந்த கூட்டம் தொடர்ந்து நிந்தித்து வருகிறது. ஒரு சாரார் இவ்வாறு கூறி வந்தால், புலம்பெயர்ந்தோரில் மற்றொரு தரப்பினர், இலங்கை தமிழ் அரசியல் தலைமைகள் மீண்டும் தமிழ் நாடு அரசியல்வாதிகளோடு நட்பு பாராட்டி, அவர்கள் மூலம் மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள்.

அவ்வாறே ஆகட்டும். அப்போது, அவர்கள் தமிழ் நாட்டில் எந்த கட்சிகளோடு உறவாடப் போகிறார்கள்? மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியோடு மட்டுமா? அல்லது, தமிழ் நாட்டை ஆளும் திமுகவுடனும் தானா? தற்போது, நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது. அந்த கூட்டணியில் போதாததற்கு காங்கிரஸ் வேறு.

கருணாநிதியையும் ராஜீவ் காந்தியையும் தொடர்ந்து கொச்சைபடுத்திக்கொண்டே, அவர்களுடைய அடுத்த தலைமுறையினரான முதல்வர் ஸ்டாலின் மற்றும் ராகுல் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைமையுடன் எவ்வாறு ஒட்டாட, உறவாடப் போகிறார்கள்?

அல்லது தாங்கள், அல்லது தங்களோடு தமிழர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், இந்திய அரசு மற்றும் அரசியல் தலைமைகளை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதை யாராவது யோசித்துப் பார்க்கிறார்களா? அல்லது, அவ்வாறு யோசித்து பார்த்த பின்தான் பேசுகிறார்களா?

அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்கே உரிய 'எடுத்தோம், கவிழ்த்தோம்' நடைமுறையை எப்போதுதான் இவர்கள் மாற்றிக்கொள்ளப் போகிறார்கள்? அதைத் தொடர்ந்து 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற புலம்பல்களையும் எப்போதுதான் நிறுத்தப் போகிறார்கள்?

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கூடைப்பந்தாட்டம் ஊடாக இளைஞர் முன்னேற்றத்தை ஊக்கப்படுத்த நாடுவரும் அமெ. விளையாட்டு தூதர்கள்

ஜூன் 8 முதல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இலங்கைக்கு வருகைதரும் அமெரிக்க விளையாட்டுத் தூதுவர்களான தேசிய கூடைப்பந்தாட்ட சங்கம் (NBA) மற்றும் பெண்கள் தேசிய கூடைப்பந்தாட்ட சங்கம் (WNBA) ஆகியவற்றின் முன்னாள் வீரர்களான ஸ்டீபன் ஹொவர்ட் மற்றும் அஸ்டோ என்ஜாய் ஆகியோரை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் பெருமையுடன் வரவேற்கிறது.

Foundation of Goodness மற்றும் IImpact Hoop Lab ஆகியவற்றுடனான ஒத்துழைப்பின் காரணமாக சாத்தியமான பல்வேறு தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் விளையாட்டின் சக்திகளை ஒன்றிணைப்பதற்கான ஒரு வார கால கூடைப்பந்தாட்ட நிகழ்ச்சித்திட்டத்தை அமெரிக்க தூதரகத்தின் பொது இராஜதந்திரப் பிரிவு ஆரம்பிக்கும்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், ஓய்வுபெற்ற தொழில்முறை கூடைப்பந்தாட்ட வீரர்களான ஹொவர்ட் மற்றும் என்ஜாய் ஆகியோர் 'ஹூப்ஸ் போஃர் ஹோப் : கூடைப்பந்தாட்டத்தின் மூலம் எல்லைகளை இணைத்தல்' எனும் ஒரு வாரகால கூடைப்பந்தாட்ட நிகழ்ச்சியை நடத்துவார்கள்.

கூடைப்பந்தாட்ட ஆலோசனை முகாம்கள் மற்றும் கண்காட்சிப் போட்டிகளுக்கு விளையாட்டுத் தூதுவர்கள் தலைமை தாங்குவதுடன் கொழும்பு மற்றும் தென் மாகாணங்களில் இடம்பெறும் வடக்கு, ஊவா, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களைச் சேர்ந்த 14-18 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் பங்குபற்றும் தலைமைத்துவ அமர்வுகளிலும் கலந்துகொள்வர்.

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம், தேசிய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வீரர்களுடன் தமது நிபுணத்துவத்தை அமெரிக்காவின் விளையாட்டுத் தூதுவர்கள் பகிர்ந்து கொள்வார்கள். கூடைப்பந்தாட்ட ஆலோசனைமுகாம்களுக்குஅப்பால்இலங்கை பாடசாலை மாணவர்களுடன் இணைந்து கொழும்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு சமூக சேவை செயற்றிட்டத்திலும் அவர்கள் பங்கேற்பர்.

'அமெரிக்க மற்றும் இலங்கை மக்களுக்கிடையில் காணப்படும் வலுவான மக்கள் தொடர்புகளை மேலும் கட்டியெழுப்புவதற்கு வருகைதந்திருக்கும் இலங்கைக்கான எமது விளையாட்டுத் தூதுவர்களாக ஸ்டீபன் மற்றும் அஸ்டோவை வரவேற்பதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம்' என அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார்.

'தொடர்பாடல், குழுப்பணி, மீண்டெழும்தன்மை, அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களில் எமது விளையாட்டுத்தூதுவர்கள்பகிர்ந்துகொள்ளும் பாடங்கள் தலைமைத்துவ மேம்பாடு, சமூகத்தை கட்டியெழுப்புதல், சமத்துவம் மற்றும் அமைதி ஆகியவற்றுக்கு மிக அவசியமானவை ஆகும். அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் விளையாட்டு ஒரு சக்திவாய்ந்த கருவியாக அமையும் எனும் எமது நம்பிக்கைக்கு இந்த அமெரிக்க விளையாட்டு தூதுவர்கள் நிகழ்ச்சித்திட்டம் ஒரு சான்றாகும்.

**அஸ்டோ என்ஜாய் பற்றி:**

ஒரு முன்னாள் தொழில்முறை பெண்கள் கூடைப்பந்தாட்ட வீராங்கனையான அஸ்டோ என்ஜாய் அமெரிக்க யுட்டா மாநில பல்கலைக்கழகத்தின் தற்போதைய உதவிப் பயிற்சியாளர் ஆவார். National Association of Intercollegiate Athletics (NAIA)இன் அனைத்துஅமெரிக்கமுதல்அணியில்இரண்டு முறை இடம்பிடித்த என்ஜாய்-டியெட்டா, டெட்ராய்ட் ஷொக்கிற்காக ஐந்து தடவைகளில் (பருவங்களில்) விளையாடியுள்ளதுடன், 2003 WNBA வீரமுதன்மை (சம்பியன்ஷிப்) இனையும் வென்றுள்ளார்.


இந்தியானா ஃபீவர், ஹூஸ்டன் கொமட்ஸ் மற்றும் சியாட்டல் ஸ்டோர்ம்



ஆகிய அணிகளுக்காகவும் அவர் விளையாடியுள்ளதுடன், இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் தொழில் ரீதியாக அவர் விளையாடியுள்ளார். அவர், விளையாட்டு, கல்வி மற்றும் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தின் ஊடாக ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான புவிமிலிற் ஹி-ஷ்ழிதீள ய்லிற்ஜ-ழிமிஷ்லிஜ (ASTOUNDIAYEF) இன் ஸ்தாபகருமாவார்.

**ஸ்டீபன் ஹொவர்ட் பற்றி:**

ஸ்டீபன் ஹோவர்ட் ஒரு நீடித்த அனுபவமுடைய NBA விளையாட்டு வீரரும், தலைமைத்துவ நிபுணரும் ESPN FOX விளையாட்டு அலைவரிசைகளுக்கான கூடைப்பந்தாட்ட ஆய்வாளரும் ஆவார். சியாட்டல் சூப்பர்சோனிக்ஸ், சான் அன்டோனியோ ஸ்பர்ஸ் மற்றும் மைக்கல்



ஜோர்டன் மற்றும் புல்ஸ் இற்கெதிராக ஹியபு இறுதிப் போட்டியில் பங்கேற்ற 1996-1997 ஜாஸ் அணி உள்ளிட்ட யுட்டா ஜாஸ் அணி ஆகியவற்றுடன் இணைந்து ஹியபு போட்டிகளில் நான்கு ஆண்டுகள் அவர் விளையாடியுள்ளார். செயற்திறன், உற்பத்தித்திறன் மற்றும் இலாபமீட்டும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உத்திகளை தனிநபர்களுடனும் நிறுவனங்களுடனும் பகிர்ந்து கொள்வதற்காக ஹொவர்ட் தற்போது உலகம் முழுவதும் பயணம் செய்கிறார (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு மண்முனைபற்றில்





'நில மறுசீரமைப்பு, பாலைவனமாதல் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மை' எனும் தொனிப் பொருளில் அனுஷ்டிக்கப்பட்ட இவ்வருடத்துக்கான தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலில் சுற்றாடல் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிலையில், 'பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம்' எனும் கருப்பொருளின்கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அலுவலக உத்தியோகத்தர்களால் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாதைகளை தாங்கிய வண்ணம் இந்த நடைபவனி களுவாஞ்சிகுடி பஸ் நிலையம் ஊடாக பொதுச்சந்தைப் பகுதிக்கு சென்றடைந்து, துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இதன்போது, 200இற்கும்மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன், உதவி பிரதேசசெயலாளர் சத்யகௌரி தரணிதரன் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்;டனர்.(05)





# கதிர்காமக் காட்டுப் பாதை 30ஆம் திகதி திறக்கப்படும்



காட்டுப்பாதை திறத்தலுடன் 2024 கதிர்காம பாதயாத்திரை வனாந்தரம் ஊடாக உத்தியோகபூர்வ ஆரம்பிக்கப்படுகின்றது.

2024ஆம் ஆண்டிற்கான கதிர்காம காட்டுப்பாதை திறத்தலுடன் கதிர்காம பாதயாத்திரை வனாந்தரம் ஊடாக எதிர்வரும் 2024.06.30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம தலைமையில் உகந்தை முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேடகூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதன்போது கல்முனை வடக்கு, ஆலையடிவேம்பு, லாகுகல, திருக்கோவில் பிரதேச செயலாளர்களும் சமூக அமைப்புக்களை சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள முருக பக்தர்கள் தங்களது பாதயாத்திரையை உகந்தை முருகன் ஆலயம் நோக்கி மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பாதயாத்திரை மேற்கொள்ளும் அடியவர்கள் உகந்தை தலத்தை வந்தடைந்து 2024.06.30 அன்று காட்டுப் பாதை திறப்புடன் கதிர்காம கொடியேற்றம் பார்க்க வனாந்தரத்தின் ஊடாக பாதயாத்திரை மேற்கொள்வர்.

மேலும் எதிர்வரும் 2024.07.06 அன்று கதிர்காம ஆலயம் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 2024.07.22ம் திகதியுடன் நிறைவடைகின்றது.

அத்துடன் கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப்பாதை 2024.07.11ம் திகதி மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2023 சுமார் 27000 மேற்பட்ட பக்தர்கள் காட்டுப் பாதை வழியாக பாதயாத்திரை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையம் மன்னாரில் திறப்பு



முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலக நிதி அனுசரணையில் 3.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையம் மாந்தை மேற்கு பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட பாலை பெருமாள்கட்டு கிராம சேவகர் பிரிவில் வெள்ளிக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு இப்பராமரிப்பு நிலையத்தை திறந்துவைத்தார்.

மாந்தை மேற்கு பிரதேசசெயலாளர் க. அரவிந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் உள்ளிட்டவர்களும் கௌரவிக்கப் பட்டனர்.

இத்திறப்பு விழாவில் வரவேற்பு நடனம், முதியோர்களின் ஆடல், பாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும், இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட செயலாளர் அ.ஸ்ரான்லிடிமெல், மாவட்ட செயலக பொறியியலாளர், கிராம அலுவலர், மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், முதியோர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

# 35 லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியிலான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 35 லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொல்கஹவெல, பொத்துஹெர பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 07.55 மணியளவில் டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவரின் பயணப்பொதிகளிலிருந்து 35,860 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவரது கணவர் டுபாயில் வசிப்பதாகவும், இவர் இதற்கு முன்னர் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவரை எதிர்வரும் 12 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக அருள்ராஜ் நியமனம்



திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய நிலையில் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட ஜே.எஸ்.அருள்ராஜ் கடந்த வாரம் கடமைகளை வட மாகாண சுகாதார அமைச்சில் பொறுப்பேற்றார்.

2003 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குள் திறந்த போட்டிப்பரீட்சை மூலம் பிரவேசித்த இவர் கிண்ணியா உதவி பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் மற்றும் சிறிது காலம் திருகோணமலை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். (05)

# வீடொன்றில் இரு வாகனங்கள் நாவலப்பிட்டியவில் தீக்கிரை



நாவலப்பிட்டி குருந்துவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொலஸ்பாகை மீனகொல்ல பிரதேசத்தில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு வாகனங்கள் தீப்பற்றி எரிந்துள்ளன.

தொலஸ்பாகை மீனகொல்ல பிரதேசத்தில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வான் ஆகியன தீப்பற்றி எரிந்துள்ளன.

தீ பற்றியமைக்கான காரணம் இதுவரை கண்டறியபடவில்லை எனவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மூன்றாவது முறை பதவியேற்கும் பாரத பிரதமர் மோடி தமிழர் அரசியல் தீர்வுக்கு தலைமையேற்க வேண்டும்

## ஈ.பி.டிபியின் ஊடக பேச்சாளர் ரங்கேஸ்வரன் கோரிக்கை




பாரத தேசத்தை மூன்றாவது முறையாக பொறுப்பேற்கும் பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முழுமையாக தலைமையேற்று பங்களிக்க வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஜயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை மறுக்கப்பட்டதால் அஹிம்சை போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக வலுப்பெற்று பின்னர் இந்நிய இலங்கை ஒப்பந்தத்துடன் இலங்கை தமிழர்களுக்கான ஓர் அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான மாகாண ஆட்சி முறைமை கொண்டுவரப்பட்டதுடன் ஆயுதப்போராட்டமும் முடிவுக்கு வந்தது.

இருந்தும் துரதிஸ்டமாக வன்முறைகள் தொடர்ந்த கொண்டிருந்தன. பின்னர் பன்னாட்டு சக்திகள் நாட்டின் உள் விவகாரங்களில் மத்தியஸ்தம் வகித்தும் பேரழிவுடன் வன்முறை அஸ்தமித்துப்போனது.

தமிழர்களுடைய அரசியல் உரிமை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வும் எட்டப்படவில்லை. ஆயினும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபை ஆட்சிமுறையே மிஞ்சியது. இருந்தும் காணி பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசால் மீளப்பெறப்பட்ட நிலையிலும் இணைந்த வடக்கு கிழக்கை ஜே.வி.பி.யினர் தமிழர்கள் ஒரு நிலத் தொடர் அலகாக வாழ்வதைத் தடுப்பதற்காக உச்ச நீதிமன்றம் சென்று வழக்குத் தாக்கல் செய்து பின் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன.

அவ்வாறாக இருந்த சூழலில் ஜனநாயக முறைப்படி மாகாண சபை தேர்தல்களும் நடத்தப்பட்டு ஆட்சி அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கமான முடிவின்றியே இருந்துவருகின்றது.

இந்தசூழ்நிலையில்மூன்றாவதுமுறையாகபாரததேசத்தை பொறுப்பேற்கும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான நரரேந்திர மோடி அரசு இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் தலைமையேற்று முழுமையாக பங்காற்ற வேண்டும்.

இலங்கை தொடர்பான அரசியல் பொருளாதாரம் பாதுகாப்பு நலன்சார்ந்து இந்தியாவே இருந்து வருகின்றது. இருப்பினும் புரையோடிப்போயுள்ள தமிழர்களது அரசியல் தீர்வு விடயத்தில் 1983 இனக்கலவரம்முதல் இன்றைய பொருளாதார நெருக்கடி வரையும் இந்தியாவே தமிழ்களுக்கு பக்கபலமாக இருந்தவருகின்றது.

அதேபோன்று தற்போது பதவியேற்கும் பாரத பிரதமர் மோடி தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்ட முழுமையாக பங்காற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுகாதாரமான சிற்றுண்டிச்சாலைகள் தொழில்புரியும் இடங்களுக்கு தேவை

## கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி தெரிவிப்பு





கொழும்பு மாநகர சபை பகுதியில் ஆரோக்கியமான உணவகங்கள் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான வைபவம் கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் ஜே.எம். பத்ராணி ஜெயவர்த்தனவின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவைகள்) டாக்டர் லக்ஷ்மி சோமதுங்கவும் கலந்துகொண்டார்.

அங்கு உரையாற்றிய ஆணையாளர் -

இலங்கையில் போஷாக்கு மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அதிகரித்து வரும் நாட்பட்ட தொற்றாத நோய்களின் பின்னணியில், ஒரே குடும்பத்தில் ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுகின்றது.

மேலும், வேலையின் தன்மை காரணமாக உழைக்கும்மக்களில்கணிசமானஎண்ணிக்கையிலான மக்கள் செயலற்ற வாழ்க்கை முறையை நாடியுள்ளனர்.

பணியிடங்களில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவில் 2/3 பங்கை வழங்குகின்றன. முக்கியமாக, காலை உணவு மற்றும் மதிய உணவு விற்கப்படும் சிற்றுண்டிச்சாலையில் உணவுகள், ஊழியர்களின் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.



ஆரோக்கியமான முறையில் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையில் காலை உணவு மற்றும் மதிய உணவு இரண்டையும் உட்கொள்வதன் மூலம்தினசரிஊட்டச்சத்துதேவையின்கணிசமான அளவு பூர்த்தி செய்யப்படலாம்.

ஆரோக்கியமான சிற்றுண்டிச்சாலை என்பது சுவையான, சத்தான மற்றும் வசதியான விலையில் உணவை வழங்கும் இடமாகும். மேலும், ஊழியர்கள் இந்த வகையான உணவை பழக்கப்படுத்துவதன்மூலம்வீட்டில்ஆரோக்கியமான உணவைப் பயன்படுத்த முனைகிறார்கள்.

சுத்தமான மற்றும் பாதுகாப்பான உணவை வழங்குவது அனைத்து உணவகங்களின் பொறுப்பாகும். பாதுகாப்பான உணவு என்பது உணவில் உள்ள அனைத்து ஊட்டச்சத்துக்களும் பாதுகாக்கப்படும் வகையில் உணவை தயாரித்து வழங்குவதாகும்.



இது பக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளால் உணவு கெட்டுப்போவதையும் மேலும் வளர்ச்சியடைவதையும் தடுக்கிறது. சரியான உணவு தயாரிப்பது உணவு விஷத்தையும் தடுக்கிறது. எனவே, உணவகங்களில் சுத்தமான மற்றும் பாதுகாப்பான உணவு வழங்கி, அதன் மூலம் ஊழியர்களின் சுகாதார நிலையை மேம்படுத்த வேண்டும்.

சுகாதாரமான உணவகங்களை பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் நூல்களையும் ஆணையாளர் பத்ராணி ஜெயவர்த்தன வழங்கிவைத்தார்.(05)

# சம்பந்தனும் சுமந்திரனும் தமிழினத்தின் துரோகிகள்

## மொட்டு எம்.பி. பகிரங்கம்



'தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான சம்பந்தனும் சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்கள்.' என சிறிலங்காபொதுஜனபெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தனதெரிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தை கொழும் பில் ஊடகங்களிடம் கருத்துரைக் கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ரோஹித அபேகுணவர்தன மேலும் கருத்து தெரிவிக்கையில் -

முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்சதமிழ்மக்களின்பிரச்சினைக் குத் தீர்வு வழங்கப் பல தடவைகள் முன்வந்தபோதுசம்பந்தனும்,சுமந்தி ரனுமே அதனைக் குழப்பியடித் தார்கள்.

இரா.சம்பந்தனும், எம்.ஏ. சுமந்திரனும் ராஜபக்சக்களுக்குஎதிரான சர்வதேச நாடுகளின்நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர்கள்.

வெளிநாடுகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்டுதமிழினத்துக்குத் துரோகம்செய்த அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் படுதோல்வியடைய வேண்டும். எதிர்வரும் அதிபர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சியே வெற்றியடையும்.

எனவே, தமிழ் மக்கள் எமது கட்சியின் பின்னால் அணி திரள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நாம் தீர்வு வழங்குவோம். - என்றார்.

(05)

# வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களுக்கு ஆர்வமில்லை

## என்கிறார் விக்னேஸ்வரன்



அதிபர் தேர்தலில் பெரும்பான்மை மக்களுக்குக் காணப்படும் ஆர்வம் தமிழ் மக்களுக்கு இல்லை என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அதிபர் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல தரப்பினரதும் கருத்துக்களைப் பெற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறு கருத்துக்கள் பெறப்பட்ட பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழ் மக்களின் சாபம் நாட்டுக்கு கேடு சபையில் சாணக்கியன் எம்.பி. சீற்றம்

தமிழ்மக்களுக்கு நடந்த அநீதிகள் தான் இலங்கையின் இந்த நிலைக்கு காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் அமர்வில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் -

தமிழ்மக்களுக்கு நடந்த பிரச்சினைகளுக்கு பிராயசித்தம் செய்யும் வரைக்கும், தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து கிடைக்கும் வரைக்கும், இந்த நாட்டை கட்டியெழுப்பபுவதென்பது ஒரு கனவாக மட்டுமே இருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்று இந்த நாட்டின் கடனை ஒருபோது அடைக்க முடியாது.இந்த நாட்டின் கடனை அடைக்க வேண்டும் என்றால் சர்வதேச முதலீடுகள் தேவை.சர்வதேச முதலீடுகள் இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றால் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார். (05)

# போக்குவரத்துத்துறை மேம்பாடு ஊடாக பொருளாதார அபிவிருத்தி கிட்டும்

## வடக்கு ஆளுநர் சாள்ஸ் நம்பிக்கை





போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும் எனவும், சுற்றுலாத்துறைசார் விடயங்களை மையப்படுத்தி போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

கடல்வழிபோக்குவரத்துத்துறையைமேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் நடைபெற்றது.



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், வட மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள், புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள், எதிர்கால திட்ட முன்மொழிவுகள், ரயில் போக்குவரத்து, கடல்வழி போக்குவரத்துச் செயற்பாடுகள், வடக்கு மாகாண போக்குவரத்துத்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

தீவுகளுக்கான பயணிகள் போக்குவரத்துக்குரிய படகுச் சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும், இறங்குதுறைகள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது கூறினார்.

பஸ் பயணிகள் நாளாந்தம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இங்கு பேசப்பட்டன.

அத்தோடு, ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் அரச மற்றும் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் கூறியதற்கு அமைய, அதற்கான உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துமாறு மத்திய அமைச்சின் துறைசார் அதிகாரியால், மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கான சமிக்ஞை கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், யாழ். மற்றும் காங்கேசன்துறை ரயில் நிலையங்களுக்கு அருகில் போக்குவரத்து முனையங்களை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆளுநர் தனது ஆலோசனைகளை முன்வைத்தார்.

மேலும் அவர், வடக்கு மாகாணத்திலுள்ள ரயில் நிலையங்களுக்கு அருகில் காணப்படும் பொருள் களஞ்சியசாலைகளை உரியவாறு பயன்படுத்த வேண்டும். பயன்பாடு குறைந்த களஞ்சியசாலைகளை தனியாரிடம் வழங்கி அவற்றை மேம்படுத்த வேண்டும். போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்திகளை அடைய முடியும். சுற்றுலாத்துறைசார் விடயங்களை மையப்படுத்தி போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத்துறையை விஸ்தரிப்பது பற்றி கேட்டறிந்துகொண்ட மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், கடல்வழி போக்குவரத்தின் அவசியம், தேவை தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்குள் தண்டவாளம் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நேரடி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படும் எனவும் போக்குவரத்துத்துறையை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(05)

# மே மாதத்தில் அந்நிய செலாவணி கையிருப்பு சொத்துக்களில் சரிவு

2024 மே மாத இறுதியில் நாட்டில் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் அளவு 5,421 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஏப்ரல் 2024 இல் பதிவாகிய 5,471 மில்லியன் அமெரிக்க டொலர் இருப்புச் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் இது 0.9 வீதம் குறைவு.

உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் முக்கிய அங்கமான அந்நிய செலாவணி கையிருப்பு, 5,389 மில்லியன் டாலர்களிலிருந்து 5,367 மில்லியன் டாலர்களாக 0.4 வீதம் குறைந்துள்ளது.

(05)

# தொடருந்துடன் கார் மோதி இருவர் சாவு

## எந்தேரமுல்லயில் சம்பவம்



வத்தளை - எந்தேரமுல்ல ரயில் கடவையில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

எந்தேரமுல்லயில் இருந்து வத்தளை நோக்கி பயணித்த கார், சமிக்ஞை விளக்குகளை மீறி கடவையை கடக்க முற்பட்ட போது எதிரே வந்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காரில் பயணித்த பியகம பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரும் கொழும்பில் தனியார் துறையில் பணிபுரிந்து வந்த 34 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொட்ரபில் மேலதிக விசாரணைகளை எந்தேரமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வாள்கள், கோடரியுடன் ஒருவர் யாழ். சுன்னாகத்தில் கைது

யாழ்ப்பாணம் சுன்னாகம் ஈவினைப் பகுதியில் ஆபத்தை ஏற்படுத்தும் கூரிய ஆயுதங்களுடன் சந்தேகநபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பிராந்திய விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரே குறித்த ஆயுதங்களை மீட்டதுடன் சந்தேகநபரையும் கைதுசெய்துள்ளனர்.

சுன்னாகம் ஈவினைப் பகுதியில் வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு சொந்தமான வீட்டிலே வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, எட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக கைதான சந்தேகநபரிடம் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் பல்வேறுபட்ட வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், மேற்படி விடயத்தில் வெளிநாட்டு பிரஜைக்கும் தொடர்புள்ளதா அல்லது வேறு நபர்களுக்கு தொடர்புள்ளதா என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# முதல் காலாண்டில் 400 கோடி டொலர் கடன்களை ஆளும் தரப்பு பெற்றுள்ளது

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் 4 பில்லியன் டொலர் கடன்களை பெற்று அரச கடன்களை 100 பில்லியன் டொலர்களாக அரசாங்கம் உயர்த்தியுள்ளது. சர்வதேசகடன்மறுசீரமைப்பு என்பது கானல் நீராகவே காணப்படுகிறது எனத் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரநெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தை முன்வைத்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தின் போது தேசிய கடன்களை மறுசீரமைக்கப் போவதில்லை என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் தேசிய கடன்கள் தான் முதலாவதாக மறுசீரமைக்கப்பட்டது.

வெளிநாட்டு அரசமுறை கடன்களை இன்று மறுசீரமைப்பதாகவும், நாளை மறுசீரமைப்பதாகவும், அடுத்த மாதம் மறுசீரமைப்பதாகவும் அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் ஒரு டொலர் கடன் கூட இதுவரை மறுசீரமைக்கப்படவில்லை.இதுதான் உண்மை.

இலங்கையின் மொத்த கடன் பெறுமதி 100 பில்லியன் டொலர் என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம், பணவீக்கம் குறைவடைந்து விட்டது என்று அரசாங்கம் பெருமை கொள்கிறது. ஆனால் கடன் நிலைமை பற்றி ஏதும் குறிப்பிடுவதில்லை.

2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் அரசாங்கம் 4 பில்லியன் டொலர் தேசிய கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் அரசமுறை கடன் 100 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

இலங்கையின் பிரதான இருதரப்பு கடன் வழங்குநர்களாக இந்தியா, சீனா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக போட்டித் தன்மையினால் இலங்கையின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கு இவ்விரு நாடுகளும் சாதகமான தீர்மானத்துக்கு வரவில்லை. - என்றார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தொழில் அமைச்சின் நடமாடும் சேவை

## திருகோணமலையில்





தொழிலாளர் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் 'நானே ஆரம்பம் வெல்வோம்ஸ்ரீலங்காசூரன்களோடு' திருகோணமலைக்கு ஸ்மார்ட் எதிர்காலம்எனும்தொனிப்பொருளில் மக்கள் நடமாடும் சேவை திரு கோணமலையில் அமைந்துள்ள மக்ஹெய்ஸர் மைதானத்தில் இடம்பெற்றது.

தொழிலாளர்மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வரவேற்புரையை தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம் பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்ப குமாரவின் அனுசரணையுடன், அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பயனாளிகளின் வதிவிட பிரதேசங்களில் இலகுவாக வழங்க இவ்வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாட்டில் தொழிலாளர் சந்தையை புனரமைப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல் மற்றும் மனிதக் கடத்தல்தொடர்பாகதிருகோணமலை மாவட்டத்தின் அரச அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற முகவர்களுக்கான விழிப்புணர்வுநிகழ்வும்இதன்போது நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நடமாடும் சேவையில் தொழிலாளர் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள், சிறுதொழில் அபிவிருத்திபிரிவு, தொழிற்பயிற்சி அதிகாரசபை உட்பட பல நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கியிருந்தன.

நேற்று (சனிக்கிழமை) மக்கள் நடமாடும்சேவைதிருகோணமலை மக்ஹெய்ஸர் மைதானத்தில் நடை முறைப்படுத்தப்பட்டது. இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், சுயதொழில் உதவி போன்றனவும் அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும்திருகோணமலைமாவட்டஒருங்கி ணைப்புக்குழு இணைத்தலைவரு மான ஏ.எல்.எம். அதாவுல்லா, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, அரச உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள், அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2024இல் வெளியிடப்பெற்றது